தினத்தந்தி ★★★★ திருச்சி 18-12-2017

கேடயம், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஆயிர வைசியர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க கோரிக்கை

திருச்சி,டிச.18–

தமிழ்நாடு மாநில ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில அளவிலான நிர்வாகிகள் கூட்டம் நேற்று திருச்சியில் நடந்தது. திருச்சி மாவட்ட தலைவர் மணிவேல் செட்டியார் தலைமை தாங்கினார். செயலாளர் பாண்டியன் வரவேற்றார். இந்த கூட்டத்தில் 'தற்போது பிற்பட்டோர் பட்டியலில் உள்ள ஆயிர வைசியர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்

டும், ஈரோடு மாவட்டம் நெருஞ்சிப்பேட்டை ஆயிர வைசியர் மடத்திற்கு ஐகோர்ட்டு உத்தரவு படி ஜனநாயக முறையில் அறங்காவலர் தேர்தலை நடத்த வேண்டும், மதுரையில் கண்ணகி கோட்டம் அரசு சார்பில் அமைக்கவேண்டும்' என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநில தலைவர் கணேசன், செயல் தலைவர் சங்கரபாண்டியன், கவுரவ தலைவர் ரெங்கநாதன் செட்டியார் உள்பட மாநிலம் முழுவதும் இருந்து மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்டனர்.